www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com

10ஆம் வகுப்பு

# அரசு பொதுத் தேர்வு மார்ச் - 2024

## மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

காலஅளவு : 3.00 மணி நேரம் ] (வினாத்தாள் விடைகளுடன்) [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்.

**குறிப்புகள் :** (i) இவ்வினாத்தாள் **ஐந்து** பகுதிகளைக் கொண்டது.
(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். [15 × 1 = 15]

1. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - இத்தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே :
அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய
இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்

2. 'மலர்க்கை' - தொகையின் வகையைத் தேர்க.
அ) பண்புத் தொகை ஆ) உவமைத் தொகை
இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத் தொகை

3. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ) வானத்தையும் பாட்டையும்
ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும்
ஈ) வானத்தையும் பேரொலியையும்

4. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே வேளாண்மை என்னும் செருக்கு. -இக்குறட்பாவில் இடம்பெறும் அடி எதுகைச் சொற்களைத் தேர்க.
அ) தாளாண்மை - தகைமைக்கண்
ஆ) தாளாண்மை - வேளாண்மை
இ) தகைமைக்கண் - தங்கிற்றே
ஈ) வேளாண்மை - செருக்கு

5. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்டது .............வினா.
"அதோ, அங்கே நிற்கும்." என்று மற்றொருவர் கூறியது ....... விடை.
அ) ஐய வினா, வினா எதிர்வினாதல்
ஆ) அறி வினா, மறை விடை
இ) அறியா வினா, சுட்டு விடை
ஈ) கொளல் வினா, இனமொழி விடை

6. 'குழந்தை வந்தது' என்ற எழுவாய்த் தொடரின் விளித் தொடரை தேர்க.
அ) குழந்தையுடன் வா ஆ) வந்த குழந்தை
இ) குழந்தையே வா! ஈ) குழந்தை வந்தது

7. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்களைத் தேர்க.
அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்
ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்
ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

8. மேன்மை தரும் அறம் என்பது ...................
அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ்கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது.

9. காசிக்கண்டம் என்பது :
அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்
ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

10. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி.
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

11. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு :
அ) சிங்கப்பூர் ஆ) மலேசியா
இ) இந்தியா ஈ) இலங்கை

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி"

12. பாடல் இடம்பெற்ற நூலைத் தேர்க.
அ) சிலப்பதிகாரம் ஆ) காசிக்காண்டம்
இ) நற்றிணை ஈ) முல்லைப்பாட்டு

13. 'நனந்தலை உலகம்' என்பதன் சரியான பொருளைத் தேர்க.
அ) சிறிய உலகம் ஆ) குளிர்ந்த உலகம்
இ) அகன்ற உலகம் ஈ) வெப்பமான உலகம்

14. 'தடக்கை' - இச்சொல்லின் இலக்கணக் குறிப்பைத் தேர்க.
அ) உரிச்சொல் தொடர் ஆ) பண்புத் தொகை
இ) வினைத் தொகை ஈ) வேற்றுமைத் தொடர்

15. பாடலின் ஆசிரியரைத் தேர்க.
அ) தமிழழகனார் ஆ) நப்பூதனார்
இ) கீரந்தையார் ஈ) இளங்கோவடிகள்

### பகுதி - II (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1

**குறிப்பு : எவையேனும் நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **21-வது வினாவிற்குக் கட்டாயமாக** விடையளிக்கவும். [4 × 2 = 8]

16. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**17.** விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.
அ) அறிவியலின் வளர்ச்சி மனிதனின் அறிவை விரிவாக்குகிறது.
ஆ) பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்வது குறிஞ்சி.

**18.** வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

**19.** பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக. பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்.

**20.** செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக எழுதுக.

**21.** 'முயற்சி' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். [5 × 2 = 10]

**22.** ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.
மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

**23.** இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்கவும்.
அ) கொடு - கோடு ஆ) இயற்கை - செயற்கை

**24.** பகுபத உறுப்பிலக்கணம் தருக - "மயங்கிய"

**25.** கலைச் சொற்கள் தருக. அ) Biotechnology ஆ) Myth

**26.** குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பதைப் போன்று வினாத் தொடர்கள் அமைக்கவும்.
(1) சுவைக்காத இளநீர் (2) விடுமுறை நாள்

**27.** "சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்" என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் - இதில் உள்ள வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.

**28.** 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

**பகுதி - III (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1**

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். [2 × 3 = 6]

**29.** இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

**30.** உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
பருப்பொருள்கள் சிதறும்படியாக பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.
அ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
ஆ) பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக.
இ) பெய்த மழை - வினைத்தொகையாக மாற்றுக.

**31.** நீங்கள் அறிந்த நிகழ்கலைக் கலைஞர் ஒருவரைப் பற்றியும் அவரது கலைத்திறன் பற்றியும் எழுதுக.

**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **34-ஆவது கட்டாயமாக** விடையளிக்க வேண்டும். [2 × 3 = 6]

**32.** எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

**33.** நெடுநாளாகப் பார்க்க எண்ணியிருந்த உறவினர் ஒருவர் எதிர்பாராத வகையில் உங்கள் வீட்டிற்கு வந்தால் அவரை விருந்தோம்பல் செய்வதைக் குறித்து எழுதுக.

**34.** அடிபிறழாமல் எழுதுக.
அ) "தென்னன் மகளே' - எனத் தொடங்கி "முடிதாழ வாழ்த்துவமே" என முடியும் அன்னை மொழியே பாடல் **அல்லது**
ஆ) "வாளால் அறுத்துச் சுடினும்" - எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடல்.

**பிரிவு - 3**

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் **சுருக்கமாக** விடையளிக்கவும். [2 × 3 = 6]

**35.** 'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது' இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும். இக்கூற்றில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

**36.** பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். - இத்திருக்குறளில் பயின்று வரும் அணியைக் குறிப்பிட்டு விளக்குக.

**37.** உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.'
- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.


**பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)**

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். [5 × 5 = 25]

**38.** அ) தமிழர் மருத்துவ முறைக்கும் நவீன மருத்துவ முறைக்கும் உள்ள தொடர்பு குறித்து விவரித்து எழுதுக. **அல்லது**
ஆ) 'பெரியாரைத் துணைக்கோடல்' என்ற வள்ளுவரின் கூற்றினை விளக்கி, உங்கள் கருத்தை எழுதுக.

**39.** அ) புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் உங்கள் தம்பிக்கு, அதனை முறையாகப் பயன்படுத்தும் வழிமுறைகளை விளக்கி, அறிவுரைகள் கூறிக் கடிதம் ஒன்று எழுதுக. **அல்லது**
ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

**40.** காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**41.** தமிழ்வேந்தன் என்பவரின் மகள் வான்மலர் அரசு உயர்நிலைப் பள்ளி, விருத்தாசலம், கடலூர் மாவட்டத்தில் 10-ஆம் வகுப்பு முடித்திருக்கிறார். அதே ஊரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 11-ஆம் வகுப்பு சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை வான்மலராகக் கருதி, கொடுக்கப்பட்ட மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

**42.** அ) மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் அட்டவணைப்படுத்துக. **அல்லது**

ஆ) மொழிபெயர்க்கவும் :

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** [3 × 8 = 24]

**43.** அ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் 'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' என்ற தலைப்பில் விவரித்து எழுதுக. **அல்லது**

ஆ) எவரேனும் ஓர் அறிஞர்/ சான்றோர்/புகழ்பெற்ற சாதனையாளர் வாழ்வில் நடந்த நிகழ்வுகளில் ஒன்றை அவரே சொல்வதைப் போன்று தன் வரலாறாக மாற்றி எழுதுக.

**44.** அ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக. **அல்லது**

ஆ) இராமானுஜர் நாடகம் வெளிப்படுத்தும் மனிதநேயத்தினைச் சுவைப்பட விளக்கி எழுதுக.

**45.** அ) பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை/கட்டுரை/சிறுகதை/கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

குறிப்பு : நூலின் தலைப்பு - நூலின் மையப்பொருள் - மொழிநடை - வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு - சிறப்புக் கூறு - நூல் ஆசிரியர்.

**அல்லது**

ஆ) குறிப்புகளைப் பயன்படுத்தி, 'சாலைப் பாதுகாப்பு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

**குறிப்புகள் :** முன்னுரை - சாலை விதிகளை அறிவோம் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துகளுக்கான காரணங்கள் - தேவையான விழிப்புணர்வு - நம் கடமை - முடிவுரை.

## விடைகள்

1. ஈ) பாடல்; கேட்டவர்
2. ஆ) உவமைத் தொகை
3. ஈ) வானத்தையும் பேரொலியையும்
4. ஆ) தாளாண்மை - வேளாண்மை
5. இ) அறியா வினா, சுட்டு விடை
6. இ) குழந்தையே வா!
7. இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்
8. அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
9. இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்
10. அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
11. ஆ) மலேசியா
12. ஈ) முல்லைப்பாட்டு
13. இ) அகன்ற உலகம்
14. அ) உரிச்சொல் தொடர்
15. ஆ) நப்பூதனார்
16. **தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயம் :**
 ஒரு சொல்லோ, சொற்றொடரோ இரு பொருள்பட வருவது இரட்டுற மொழிதல் அணி எனப்படும். இதனைச் 'சிலேடை அணி' என்றும் அழைப்பர். தற்கால உரைநடையிலும் மேடைப்பேச்சிலும் சிலேடைகள் பயன்படுத்தப்படுகின்றன.
 **எ.கா :** சென்னை வரவேற்கிறது என்பதை, சென்னை வர வேர்க்கிறது (வியர்க்கிறது என்பதன் பேச்சு வழக்கு) என்று சிலேடை மூலம் பகடியாகச் சொல்லலாம்.
17. அ) எதன் வளர்ச்சி மனிதனின் அறிவை விரிவாக்குகிறது?
 ஆ) பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்வது எது?
18. **வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. :**
 - வறுமையின் காரணமாக ம.பொ.சி. தொடக்கக் கல்வியைக்கூட தொடர இயலவில்லை. நூல் வாங்குவதற்கு போதிய பணமில்லாததால் பழைய புத்தகம் விற்கும் கடைகளுக்கு சென்று புத்தங்களை குறைந்த விலைக்கு வாங்குவார்.
 - உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்களை வாங்கிவிட்டு, பல வேளைகளில் பட்டினி கிடந்திருக்கிறார்.
19. **செந்நாப்போதார் கூறுபவை :**
 - உழைத்ததால் கிடைத்த ஊதியத்தைக் கூரான ஆயுதம் என்று செந்நாப்போதார் கூறுகிறார்.
 - ஏனெனில் அது பகைவரை வெல்லும் கூர்மையான ஆயுதத்தைப் போன்று துணை செய்யும்.
20. **செய்குதம்பிப் பாவலரின் கல்வி முழக்கத் தொடர்:**
 - அருளைப் பெருக்கு!
 - அறிவைச் சீராக்கு!
 - மயக்கம் அகற்று!
 - கல்வியைப் போற்று!
21. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
 இன்மை புகுத்தி விடும். **– திருவள்ளுவர்**
22. **சரியான தொடர்கள் :**
 - ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
 - ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

 **பிழையான தொடர் :** ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
 **பிழைக்கான காரணம் :** தாறு என்பது வாழைக்குலையைக் குறிக்கும். சீப்பு என்பது அதில் அடங்கிய வரிசையான பழங்கள் ஆகும்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

23. அ) மாணவர்களே! நீங்கள் **கொடு**க்கும் விடைகளுள் முக்கியமான வார்த்தையை அடிக் **கோடு** போட்டுக் காட்டுங்கள்.
ஆ) பாதை தெரியாத **இயற்கைக்** காடுகளில் பயணிக்கச் **செயற்கைக்** கருவிகள் பயன்படுகின்றன.

24. **மயங்கிய – மயங்கு + இ(ன்) + ய் + அ**
மயங்கு - பகுதி
இ(ன்) - இறந்தகால இடைநிலை 'ன்' புணர்ந்து கெட்டது
ய் - உடம்படு மெய்
அ - பெயரெச்ச விகுதி

25. அ) Biotechnology - உயிரித் தொழில்நுட்பம்
ஆ) Myth - தொன்மம்

26. 1) சுவைக்காத இளநீர் - **சுவைக்காத இளநீர்** ஏதாவது உண்டா?
2) விடுமுறைநாள் - **விடுமுறை**நாளில் விளையாடாத மாணவர்கள் உண்டா?

27. "சீசர் எப்போதும் என் சொல் பேச்சைக் **கேட்கும்.** புதியவர்களைப் பார்த்து **குரைக்குமே** தவிர **கடிக்காது**"
**விளக்கம் :** கேட்பான், கடிக்கமாட்டான் என்பது உயர்திணைக்கு உரிய சொற்கள். இங்கு உவகை கருதி அஃறிணை உயர்திணையாகக் கூறப்பட்டுள்ளது. 'கத்துவான்' என்பது மரபு வழு. **நாய் குரைக்கும்** என்பதே வழாநிலை ஆகும்.

28. **வேங்கை :**
- வேங்கை என்பது தனிமொழியாகி மரத்தையும், புலியையும் குறிக்கும்.
- வேம்+கை எனத் தொடர்மொழியாகப் பிரிந்து 'வேகின்ற கை' எனப் பொருள் தரும்.
- இது தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவதால் பொதுமொழியாக இருக்கிறது.

29. ■ **மனிதனை மேம்படுத்தும் அறிவியல் கண்டுபிடிப்புகள்:** மனிதன் செய்ய முடியாத பல ஆக்கப்பூர்வமான பணிகளை அறிவியல் கண்டுபிடிப்புகள் செய்து முடிக்கிறது.
- அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியைக் காண செயற்கை நுண்ணறிவு உதவுகிறது.
- உலகளாவிய வணிகத்திற்கும் தேடுதலுக்கும் அறிவியல் கண்டுபிடிப்புகள் துணையாக நிற்கின்றன.
- மனித இனத்தை இயற்கை, நோய் மற்றும் பிற அழிவுகளிலிருந்து காக்க அறிவியல் கண்டுபிடிப்புகள் பேருதவியாக உள்ளன.
- மனித உழைப்பையும், நேரத்தையும் மிச்சப்படுத்தி, சராசரி ஆயுளைக் கூட்டுகிறது.

30. அ) புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது.
ஆ) மீண்டும் மீண்டும்
இ) பெய்த மழை - பெய்மழை.

31. **நிகழ்கலை கலைஞர் :** எங்கள் பகுதியில் தெருக்கூத்து, தப்பாட்டம், கரகாட்டம், புலி ஆட்டம் போன்ற நிகழ்கலை ஆட்டங்களை நிகழ்த்துபவர்கள் உள்ளனர். அவர்களுள் புலி ஆட்டம் ஆடும் வீரமுத்து என்பவரைப் பற்றி இங்கு காண்போம்.
**வீரமுத்து :** தொன்மையான கலைகளுள் ஒன்றான புலி ஆட்டம் ஆடுவதில் சிறந்த கலைஞர். இவர் ஆடுவதைக் காண ஏராளமானோர் ஆடுமிடத்தில் கூடுவர். எண்ணற்ற பரிசுகளைப் பெற்றவர். வெளிநாடுகளில் நடக்கும் விழாக்களில் இவர் இக்கலையை நிகழ்த்துவார்.
**கலைத்திறன் :** தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலை புலி ஆட்டமாகும். உடம்பெங்கும் புலியைப் போன்று கறுப்பும் மஞ்சளுமான வண்ணக் கோடுகளையிட்டுத் துணியிலான வாலை இடுப்பில் கட்டிக் கொண்டு ஆடுவார். புலியைப் போன்று நடந்தும் பதுங்கியும் பாய்ந்தும் எம்பிக் குதித்தும் நாக்கால் வருடியும் பற்கள் தெரிய வாயைப் பிளந்தும் உறுமியும் பல்வேறு அடவுகளை வெளிப்படுத்தி இவர் ஆடும்போது அனைவரும் கை தட்டி ரசிப்பார்கள்.

32. **அறியேன் என்று கருணையன் கூறுவன :**
- 'நான் உயிர் பிழைக்கும் வழி அறியேன்.
- நினைந்து கண்ட அறிவினுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத இந்த உடலின் தன்மையை அறியேன்.
- உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக் கொணரும் வழிவகைகளை அறியேன்.
- காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன். என் தாய் தன் கையால் காட்டிய முறைகளை மட்டுமே அறிவேன்' என்று கருணையன் கூறுகிறார்.

33. **நெடுநாளாகப் பார்க்க எண்ணிய உறவினர் :** நெடுநாளாகப் பார்க்க எண்ணியிருந்த உறவினர் என் மாமா. அவர் என்னுடைய அம்மாவின் அண்ணன். அவர் இந்தியாவில் இருப்பதை விட அயல் நாடுகளில் இருப்பதுதான் அதிகம். அவர் எங்கள் வீட்டிற்கு வரமாட்டாரா? என்று நாங்கள் ஏங்கியிருக்கிறோம். திடீரென ஒருநாள் எங்கள் வீட்டிற்கு வந்தார். எனக்கு அது கனவா நனவா என்று தோன்றியது. என்னை நானே கிள்ளிப் பார்த்துக் கொண்டேன். அது நனவுதான். ஓடிப்போய் வாசலில் இருந்தே அவரை அழைத்து வந்தேன். அவர் என்னைக் கட்டி அணைத்து உச்சி முகர்ந்து முத்தமிட்டார். அன்று முழுவதும் நான் அவருடனேயே இருந்தேன். என் அம்மா மாமாவிற்குப் பிடித்த உணவைச் சமைத்தார். நாங்கள் அனைவருமே மாமாவிடம் மாறி மாறிப் பேசிக் கொண்டே இருந்தோம். நான் என் பள்ளி நண்பர்கள் பற்றியும் பள்ளியில் வாங்கிய பரிசுகள் பற்றியும் கூறினேன். அவரும் அவருடைய அயல்நாட்டு அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். மதிய உணவு தயாரானதும் சாப்பிட்டு விட்டு நாங்கள் அனைவரும் என் மாமாவுடன் மகிழுந்தில் மெரினா கடற்கரைக்குச் சென்றோம். இரவு வீட்டிற்கு வந்தோம். நீண்ட நாட்களுக்குப் பிறகு மாமாவைப் பார்த்ததால் என் அம்மாவும் மாமாவிடம் பேசிக் கொண்டே இருந்தார். இரவு ஒரு மணி வரைப் பேசினோம். அன்றைய நாள் என் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்வாகவே இருந்தது. மீண்டும் அந்நாள் எப்போது வரும் என்பது போல் உணர்ந்தேன்.

34. அ) தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!
**– பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

ஆ) வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.
**– குலசேகராழ்வார்**

35.

| வினைமுற்று | தொழிற்பெயர் | வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|---|---|
| அறிந்தது | அறிதல் | தெரிந்தது | தெரிதல் |
| அறியாதது | அறியாமை | தெரியாதது | தெரியாமை |
| புரிந்தது | புரிதல் | பிறந்தது | பிறத்தல் |
| புரியாதது | புரியாமை | பிறவாதது | பிறவாமை |

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



36. **அணிச்சுட்டல் :** சொற்பொருள் பின்வருநிலையணி.

**அணி – விளக்கம் :** ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

**சான்று :** பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்

**சான்று – விளக்கம் :** ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிப்புடையவராகச் செய்வது செல்வம் அதைத்தவிர உலகில் சிறந்த பொருள் வேறு இல்லை.

**அணிப் பொருத்தம் :** இக்குறளில் 'பொருள்' என்ற சொல் மீண்டும் மீண்டும் பல முறை வந்து, 'செல்வம்' என்ற ஒரே பொருளைத் தருவதால் இது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

37.

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| உல/கத்/தோ | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| டொட்/ட | நேர் நேர் | தேமா |
| ஒழு/கல் | நிரை நேர் | புளிமா |
| பல/கற்/றும் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| கல்/லார் | நேர் நேர் | தேமா |
| அறி/விலா | நிரை நிரை | கருவிளம் |
| தார் | நேர் | நாள் |

38.

**அ) தமிழர் மருத்துவ முறை - சித்த மருத்துவம் :**

பதினெண் சித்தர்கள் கண்டறிந்த மருத்துவம் சித்த மருத்துவமாகும். உலகில் பின்விளைவுகளற்ற ஒரே மருத்துவம் சித்த மருத்துவம் ஆகும். தமிழரின் உணவே மருந்தாகும். வாதம், பித்தம், சீதம் சமநிலையில் வைத்திருக்க மூலிகைகள் பயன்படுகின்றன. தமிழர் மருத்துவமுறையில் பக்க விளைவுகள் இல்லை. குணமாக நாள்பட்டாலும் எந்த நோயும் தாக்காது.

**அறுவை மருத்துவம் :** பண்டைத் தமிழர் அறுவை மருத்துவத்தில் சிறந்து விளங்கினர். மணிமேகலையில், சுதமதியின் தந்தையின் சரிந்த குடலைப் புத்தத் துறவியர் சரி செய்தமைக் குறித்து கூறப்பட்டுள்ளது.

**நவீன மருத்துவம் :** நவீன மருத்துவத்தில் அறிவியல் வளர்ச்சிகேற்ப பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆராய்ச்சிகளின் மூலம் கிடைத்த முடிவுகளை அடிப்படையாக கொண்டது. நவீன மருத்துவத்தின் மூலம் உடல் உறுப்புகளை (கை, கால்) இழந்தவர்களுக்கு செயற்கை உறுப்புகள் பொருத்தப்படுகின்றன. மாற்று இதய அறுவை சிகிச்சை மூலம் இதய நோயாளி குணமடைகிறார். மாற்று சிறுநீரக அறுவை சிகிச்சை மூலம் சிறுநீரகம் பாதிப்படைந்தவர் குணமடைகிறார். எனினும் நவீன மருத்துவமுறையில் சில சமயங்களில் பக்க விளைவுகள் ஏற்படுகின்றன.

**அல்லது**

**ஆ) பெரியாரைத் துணைக்கோடல் வள்ளுவரின் கூற்று :**

**குறள் :** அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

**விளக்கம் :** கிடைத்தற்கரிய பேறுகளுள் எல்லாம் பெரும்பேறு பெரியோரைப் போற்றித் துணையாக்கிக் கொள்ளல் ஆகும்.

**குறள் :** இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

**விளக்கம் :** குற்றங் கண்டபொழுது இடித்துக் கூறும் பெரியாரைத் துணையாகக் கொள்ளாத பாதுகாப்பற்ற மன்னன், பகைவர் இன்றியும் தானே கெடுவான்.

**குறள் :** பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

**விளக்கம் :** தான் ஒருவனாக நின்று பலரோடு பகை மேற்கொள்வதைக் காட்டிலும் பல மடங்கு தீமையைத் தருவது நற்பண்பு உடையவரின் நட்பைக் கைவிடுதலாகும்.

**கருத்து :** பேரறிவு கொண்ட சான்றோரின் துணையைப் பெறுவது சிறந்த பேறாகும். தம் குற்றத்தை கண்டித்து திருத்தும் பெரியாரைத் துணையாக்கிக் கொள்ளாவிட்டால் தானே கெடுவான். தனக்கு துணையாக உள்ளவரை விட்டு விலகுவது பலரைப் பகைத்து கொள்வதை விட பல மடங்கு தீமையைத் தரும்.

39. **அ)**

எண். 15, கம்பர் தெரு,
செங்கல்பட்டு,
26 / 04 / 20XX

அன்புள்ள தம்பிக்கு,

உன் அன்பு அண்ணன் எழுதும் கடிதம். நான் இங்கு நலமாக உள்ளேன். உன் நலத்தையும் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி அனைவருடைய நலனையும் அறிய அவா. நீ எவ்வாறு படிக்கிறாய்? உன்னுடைய கூடைப்பந்து பயிற்சியெல்லாம் எப்படி இருக்கிறது? அன்றாடம் பயிற்சிக்குச் செல்கிறாயா? படிப்பையும் விளையாட்டையும் இரு கண்களாக நினைத்து இரண்டிலும் கவனம் செலுத்து. நீ திறன்பேசியை அதிகமாகப் பயன்படுத்துவதாக அப்பா கூறினார். திறன்பேசியினால் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. படிப்பில் உன் ஐயங்களைத் தீர்க்க இணையத்தைப் பயன்படுத்துவாய்.

அப்போது இலவச இணைப்பு போல் தேவையற்ற விளம்பரங்களும் காட்சிகளும் உன்னைக் கவரும். அவற்றை விலக்கி விடு. படிப்பில் மட்டும் கவனம் செலுத்து. புலனம், முகநூல் மூலம் உன் நண்பர்களுடன் பேசிக்கொண்டிருக்காதே. அப்பா, அம்மா சொல்வதைக் கேட்டு நற்பெயர் எடுக்க வேண்டும். அடுத்த மாதம் விடுமுறையில் வரும்போது நேரில் பேசலாம்.

இப்படிக்கு,
உன் அன்பு அண்ணன்
வேலவன்

**உறைமேல் முகவரி:**

| | |
|---|---|
| பெறுநர்<br>கண்ணன்,<br>10, நேரு வீதி, வேலூர். | அஞ்சல் தலை |

**அல்லது**

**ஆ) நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம்**

**அனுப்புநர் :** சென்னை 29
செல்வம். அ 19.05.20xx
20, முத்து மாரியம்மன் கோவில் தெரு,
சென்னை -29.

**பெறுநர் :**
நாளிதழ் ஆசிரியர்,
ஜனனம், சென்னை- 40

வணக்கம்

**பொருள் :** பொங்கல் மலருக்காகக் கட்டுரை வெளியிடுதல் தொடர்பாக.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



நான் மேலே கண்ட முகவரியில் வசிக்கிறேன். நான் பத்தாம் வகுப்பு படிக்கிறேன். தங்களுடைய நாளிதழில் பொங்கல் மலருக்காக கட்டுரை எழுத விருப்பம் உள்ளவர்கள் எழுதி அனுப்பலாம் என்ற விளம்பரத்தைப் பார்த்தேன். அதற்காக 'உழவுத்தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதி அனுப்பியுள்ளேன். என்னுடைய கட்டுரை நாளிதழில் வரவேண்டும் என்பது என் நீண்ட நாள் கனவு. தங்களுடைய விளம்பரம் என் கனவை நனவாக்கிவிட்டது. என்னுடைய கட்டுரையை இப்பொங்கல் மலரில் வெளியிடுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி!

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
செல்வம். அ

**உறைமேல் முகவரி:**

| | |
|---|---|
| நாளிதழ் ஆசிரியர்,<br>ஜனனம், சென்னை - 40 | அஞ்சல் தலை |

40. **மரம் – ஒரு வரம்**

காய் தந்தாய் - நல் கனி தந்தாய்
கோடைக்குக் கொடையானாய்
இயற்கையின் அரணானாய்
பூமிக்கு ஆடையானாய் - எங்கள்
வாழ்விற்கு உயிர்மூச்சு ஆனாய்
சிந்தைக்குப் பசுமையானாய்
சருகுகளை உதிர்த்து எருவானாய்
ஐந்தறிவு பறவைகளுக்கு வீடானாய்
ஆறறிவு மனிதனுக்கு வாழ்வானாய்
மழை வேண்டி யாகம் - அந்த
யாகமே நீதானோ?
மரம் வளர்ப்போம் - மழை பெறுவோம்!

41. **மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்**

சேர்க்கை எண் : 10296 தேதி : 15.6.20xx
வகுப்பும் பிரிவும் : 11-அ

1. மாணவ/மாணவியின் பெயர் : வான்மலர்
2. பிறந்த தேதி : 19.5.2008
3. தேசிய இனம் : இந்தியன்
4. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் : தமிழ்வேந்தன்
5. வீட்டு முகவரி : எண் -46, திரு.வி.க. தெரு, விருத்தாசலம், கடலூர்.
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு : பத்தாம் வகுப்பு
7. பயின்ற மொழி : தமிழ்
8. பெற்ற மதிப்பெண்கள் : 490/500
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி : அரசு மேல்நிலைப் பள்ளி, விருத்தாசலம்.

| தேர்வின் பெயர் | பதிவு எண் – ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 620 085 | தமிழ் | 99 |
| பொதுத் தேர்வு 2023 | | ஆங்கிலம் | 95 |
| | | கணக்கு | 100 |
| | | அறிவியல் | 100 |
| | | சமூக அறிவியல் | 96 |
| | | மொத்தம் | 490 |

42. **அ)**

| நாம் செய்யவேண்டுவன (அறங்கள்) | அறங்கள் தரும் நன்மைகள் |
|---|---|
| நல்ல சொற்களையே தேர்ந்தெடுத்துப் பேசுதல். | நல்ல நண்பர்களைப் பெறலாம்; எதிரிகளை நண்பராக்கலாம். |
| ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் மாற்றிப் பேசாதிருத்தல். | நல்ல நட்பு கிடைக்கும், நட்பு தொடரும். |
| பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிடல். | மன அமைதி கிடைக்கும், நல் சிந்தனை மேலோங்கும். |
| கோபத்தைக் கைவிடல். | பாசம் மேலோங்கும், ஒற்றுமை பெருகும். |

**அல்லது**

**ஆ)** **கூத்து :** கிராமிய கலைஞர்களால் தெருவில் இசை நாடகம் போல் நடத்தப்படுவதே தெருக்கூத்து. இதில் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலும் இன்னபிற பழங்கால புராணங்களிலிருந்தும் கதைகளை, நிறைய பாடல்களுடன் நாடகமாக்கம் செய்து, சூழ்நிலைக்கேற்ப வசனங்களை சேர்த்து கலைஞர்கள் மெருகேற்றி நடிப்பார்கள். பதினைந்திலிருந்து இருபது கலைஞர்கள் ஒரு குழுவாக 'கூத்து குழு' ஒன்றை அமைத்து இதை நடத்துவார்கள். குழுவுக்கென ஒரு பாடகர் இருந்தாலும், அனைவருமே தங்கள் குரலில் பாடுவார்கள். இதில் பங்கேற்கும் கலைஞர்கள் மிக கனமான உடைகளும், ஆபரணங்களும் அணிந்து கனமாக முகப்பூச்சும் அணிந்து இதில் பங்கு கொள்வார்கள். இந்த கூத்துக் கிராமப்புறங்களில் மிகவும் பிரபலமாகும்.

43.

**அ)** **முன்னுரை :** உயிரினங்களில் மனிதரை உயர்த்திக் காட்டுவது அவர்களின் சிந்தனை ஆற்றலே! செயற்கை நுண்ணறிவு காலத்தில் இருக்கிறோம். பெரும்பாலான தொழில்நுட்ப நிறுவனங்கள் இத்தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதிலும் விற்பனை செய்வதிலும் கவனம் செலுத்துகின்றன.

**செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் :** எதிர்காலத்தில், பெற்றோர்கள் ரோபோவிடம் குழந்தையை ஒப்படைத்துவிட்டு நிம்மதியாக அலுவலகம் செல்வார்கள். ரோபோக்கள் வயதானவர்களுக்கு உதவி செய்து, அவர்களுடன் பேச்சுக் கொடுத்து உற்ற தோழனாகப் பேணிக் காக்கும். மனிதர்கள் செய்ய இயலாத, கடினமான பணிகளையும் ரோபோக்கள் செய்யும். மனித இனத்தைத் தீங்குகளிலிருந்து காப்பாற்றும். பெரு நிறுவனங்கள் தங்கள் பொருள்களை உற்பத்தி செய்யவும், சந்தைப்படுத்தவும் செயற்கை நுண்ணறிவு உதவும். ஆலோசனை வழங்குவது, பயண ஏற்பாடு செய்து தருவது போன்று பணியாள் போல் அனைத்து வேலைகளையும் செய்யும் வகையில் தொழில்நுட்பம் மாறும். எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு கொண்டு ஊர்திகளை இயக்க வேண்டியிருக்கும். இதனால் விபத்துகள் குறையும். பயண நேரம் மிச்சமாகும். நோய்களைக் கண்டறிந்து மருத்துவம் செய்து குணப்படுத்தும். கல்வி சார்ந்த செயல்பாட்டில் மாபெரும் புரட்சி ஏற்படும். மனிதகுலத்துக்கு நன்மை பயக்கும்.

**இதழியல் துறை :** இதழியலில் செயற்கை நுண்ணறிவு இயல்பான மொழிநடையை உருவாக்குதல் (Natural language Generation) என்னும் மென் பொருளை உருவாக்கியுள்ளது. அதற்கு வேர்டுஸ்மித் (எழுத்தாளி) என்று பெயர். இதனிடம் தகவல்களைக் கொடுத்தால் போதும், அழகான கட்டுரையைச் சில விநாடிகளில் உருவாக்கிவிடும்.

**முன்னேற்றம் :** மனிதக் கண்டுபிடிப்புகள் அனைத்திலும் நன்மை, தீமை என்று இரண்டு பக்கங்கள் இருந்தே வந்திருக்கின்றன. அதற்கேற்ப மனிதர்கள் தங்களை மாற்றிக் கொள்வார்கள்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



இப்போது உலகில் இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பயன்பாட்டில் இருக்கின்ற செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், எதிர்காலத்தில் உலகில் ஒவ்வொரு துறையிலும் அளவிடற்கரிய முன்னேற்றத்தைத் தரும்.

**முடிவுரை :** மனிதனால் உருவாக்கப்பட்ட அறிவியல் மனிதனைக் காக்க வேண்டுமே தவிர அழிவின் பாதைக்கு அழைத்துச் சென்றுவிடக் கூடாது. அதற்கு உலக நாடுகள் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும்.

**அல்லது**

ஆ) **முன்னுரை : அப்துல்கலாம்**

1931ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ஆம் நாள் இராமேஸ்வரத்தில் ஜைனுல்லா மரைக்காயர் - ஆஷிமா தம்பதியருக்கு மகனாகப் பிறந்தேன். என் வாழ்க்கை வரலாற்றில் நடந்த நிகழ்வுகளை உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் பெருமையடைகிறேன்.

**இளமைக்காலம் :** என்னுடைய பள்ளிப் படிப்பை இராமேஸ்வரத்தில் உள்ள அரசுப்பள்ளியில் தமிழ்வழிக் கல்வி மூலம் தொடங்கினேன். அறிவியல் மற்றும் கணிதப் பாடங்களில் சிறுவயது முதலே ஆர்வம் கொண்டிருந்தேன். பத்திரிகை விற்பனை செய்த என்னுடைய உறவினருக்கு உதவி செய்து அதன் மூலம் கிடைத்த வருமானத்தை என் படிப்புக்காக செலவு செய்தேன். பள்ளிப் பருவத்தில் கல்விச் சுற்றுலா சென்றிருந்தபோது பறவைகள் எவ்வாறு பறக்கின்றன என்பதை ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். இதுவே பின்னாளில் நான் விமானத்தை வடிவமைக்க தூண்டுகோலாக இருந்தது.

**கல்லூரிப் படிப்பு :** 1954-இல் இயற்பியல் பிரிவில் இளங்கலைப் பட்டம் பெற்றேன். 1955-இல் சென்னையிலுள்ள எம்.ஐ.டி.யில் 'விண்வெளி பொறியியல்' படிப்பைத் தொடங்கினேன்.

**விமான வடிவமைப்பு :** எம்.ஐ.டியில் படித்து முடித்த பின் உள்நாட்டுத் தொழில்நுட்ப அறிஞர்களின் உதவியுடன் உள்நாட்டில் கிடைத்த பொருள்களைக் கொண்டு 'நந்தி' என்ற விமானத்தை வடிவமைத்து இயக்கியும் காட்டினேன்.

**பணி :** 1983-இல் இந்தியப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராகவும், பாதுகாப்பு அமைச்சக அறிவியல் ஆலோசகராகவும் பொறுப்பேற்றேன்.

**சாதனைகள் :** இந்தியாவில் முதன்முறையாக 1974-இல் 'சிரிக்கும் புத்தர்' என்ற திட்டத்தில் அணுவெடிப்புச் சோதனை நிகழ்ந்தது. அத்திட்டத்தில் பங்கேற்ற 60 விண்வெளி பொறியியல் அறிஞர்களுள் நானும் ஒருவனாக இருந்தது எனக்குப் பெருமையளிக்கிறது. 1980-இல் இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் எஸ்.எல்.வி.3 என்ற ஏவுகணையைப் பயன்படுத்தி ரோகிணி-I என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தினேன். 1998 ஆம் ஆண்டு 'ஆப்ரேஷன் சக்தி' என்ற திட்டத்தின் மூலம் பொக்ரான் அணுவெடிப்புச் சோதனை யில் முக்கியப் பங்காற்றினேன். இந்தியாவை அணு ஆயுத வல்லரசாக மாற்ற வேண்டும் என்ற என்னுடைய கனவு நனவானது. 2002 முதல் 2007 வரை இந்தியக் குடியரசுத் தலைவராகவும் இருந்துள்ளேன்.

**விருதுகள் :** இந்திய அரசின் உயரிய விருதான 'பாரத ரத்னா' விருது எனக்கு வழங்கப்பட்டது. 23 பல்கலைக்கழகங்கள் 'டாக்டர் ஆ∴ப் சயின்ஸ்' என்ற பட்டத்தை வழங்கியுள்ளன. ஆர்யபட்டா விருது, நேரு விருது, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் வழங்கிய 'டாக்டர் ஆ∴ப் ∴பிலாசபி', விஸ்வபாரதி பல்கலைக்கழகம் வழங்கிய 'தேசிகோத்தமா' ஆகிய பட்டங்கள் எனக்கு வழங்கப்பட்டன. இவ்விருதுகள் யாவையும் எனக்கு மட்டும் உரித்தானவை அல்ல; என்னுடன் சேர்ந்து உழைத்த அனைவருக்கும் உரித்தானவை.

**முடிவுரை :** அறிவியல் மீது எவ்வளவு பற்று கொண்டிருந்தேனோ அந்த அளவு தாய்மொழி மீதும் பற்றுக் கொண்டிருந்தேன். எனக்கு மிகவும் பிடித்த நூல் திருக்குறளாகும். ஏவுகணைகளை விண்ணில் ஏவிய நான் பலமுறை மாணவர்களின் கேள்விக் கணைகளை எதிர்கொண்டு பதில் அளித்துள்ளேன். இளைஞர்களுக்கு நான் கூற விரும்புவது, "கனவு, கனவு, கனவு; இதனை சிந்தனை வடிவமாக்குங்கள், பின் செயலாற்ற முனைப்படுங்கள்" என்பதாகும்.

44.

அ) **முன்னுரை :** துணையின்றி வாழும் நிலை இரங்கத்தக்கது. எப்படிப்பட்டவராக இருந்தாலும் பிறரது துணையைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. துணையே இல்லாதவர் என்று கருதி நாம் அலட்சியம் செய்பவருக்கும் துணையொன்று இருப்பதை அறிய முடிகிறது. மனிதநேயம் மிக்க மனிதர்கள் எக்காலத்தும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அந்த வகையில் கு.அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' என்ற சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர்கள் குறித்துக் காண்போம்.

**வீரப்பன் :** குப்புசாமியின் உயிர் நண்பன் வீரப்பன். வீரப்பன் கட்டட மேஸ்திரியாக கூலி வேலை செய்யும் ஏழைத் தொழிலாளி. குப்புசாமி, தாய்மாமன் வீட்டில் தங்கியிருந்தபோது நோய் காரணமாக வேலையை இழந்துவிட்டான். தாய்மாமன் வீட்டில் அவனை சரியாகக் கவனிக்கவில்லை. அதனால் துன்பப்பட்ட குப்புசாமியை அழைத்து வந்து, சாப்பாடு போடுவான். குப்புசாமி காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கு தன் சித்தி வீட்டிற்கு வந்த பின்பும் வீரப்பன் அவனை மறக்கவில்லை. சென்னைக்கு ஒரு வேலையாக வந்த ஆறுமுகத்திடம் ஒரு கடிதத்தையும் மூன்று ரூபாயையும் குப்புசாமிக்காக கொடுத்தனுப்புகிறான். அந்தக் கடிதத்தில் அவன் எழுதியிருந்த செய்திகள் வீரப்பனின் மனிதத்தை வெளிப்படுத்துவதாக இருந்தது. அக்கடிதத்தில், குப்புசாமி ஊரைவிட்டு போனது தன் உயிரே போய்விட்டது போல இருந்தது என்று கூறுகிறான். மேலும் குப்புசாமிக்காக தினமும் கோயிலுக்குச் சென்று சாமி கும்பிடுவதாகவும் எழுதியிருந்தான். கடன் வாங்கி மூன்று ரூபாய் கொடுத்தனுப்பியுள்ளதாகவும், நேரில் வருவதைவிட, பஸ்ஸுக்கு ஆகும் செலவு குப்புசாமிக்கு உதவியாக இருக்கும் என்பதால் பணத்தைக் கொடுத்துவிட்டதாகவும் எழுதியுள்ளான். வேறு இடத்தில் கேட்டிருக்கும் கடன் தொகை கிடைத்தால் நேரில் பார்க்க வருவதாகவும் எழுதியிருந்தான். இக்கடிதம் வீரப்பனின் மனிதநேயத்தை மட்டும் வெளிப்படுத்தவில்லை. மனிதநேயம் இல்லாமல் இருந்த, தங்கவேலுவின் பக்கத்து வீட்டு நபரையும் மனம் மாறச் செய்தது.

**ஆறுமுகம் :** குப்புசாமி வேலை செய்த சைக்கிள் கடைக்கு எதிரேயிருந்த விறகுக் கடை ஒன்றில் கூலி வேலை செய்யும் ஏழைத் தொழிலாளிதான் ஆறுமுகம். வீரப்பன் அளவிற்கு குப்புசாமியிடம் நட்பு இல்லை என்றாலும் ஓரளவு அறிமுகம் ஆனவன். குப்புசாமியை மருத்துவமனையில் சேர்த்த செய்தியை அறிந்தவுடன், தன் பிள்ளைகளுக்காக வாங்கியிருந்த நான்கு சாத்துக்குடிப் பழங்களில் இரண்டையும், ஒரு ரூபாயையும் கொடுத்து குப்புசாமியிடம் சேர்த்துவிடச் சொன்னான். வீரப்பன் கொடுத்தவற்றை மட்டும் கொடுத்துவிட்டு போயிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்வதற்கு அவனுள் இருந்த மனிதநேயம் இடம் கொடுக்கவில்லை.

**முடிவுரை :** இந்த உலகில் நாம் நம் கண் முன்னால் காணும் ஒவ்வொருவரையும் நேசிக்க இயலவில்லை என்றால், கண்ணுக்குத் தென்படாத கடவுளிடம் எவ்வாறு அன்பை செலுத்த இயலும் என்று அன்னை தெரசா கூறியது போல வீரப்பன், ஆறுமுகம் ஆகிய இரு கதைமாந்தர்களிடம் மனிதம் வெளிப்பட்டு நிற்பதை இக்கதையின் வாயிலாக உணர முடிகிறது.

**அல்லது**

ஆ) **முன்னுரை:** நாளுக்கு ஒரு முறை மலர்வது சண்பகம். ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது பிரம்ம கமலம். பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது குறிஞ்சி. நம் தலைமுறைக்கு ஒருமுறை பிறப்பவர்கள் ஞானிகள். அவர்களுள் ஒருவரான இராமானுசரின் மனித நேயம் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**பூரணரைச் சந்தித்தல்:** திருமந்திரத் திருவருள் பெறத் தண்டும், கொடியுமாக இராமானுசரை வரச் சொல்லுங்கள் என்னும் செய்தி பூரணரால் திருவரங்கத்திற்கு அனுப்பப்பட்டது. இராமானுசர், கூரேசர், முதலியாண்டான் ஆகியோர் பூரணர் இல்லத்திற்கு வந்தனர். இராமானுசரைப் பார்த்த பூரணர்,

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



"தண்டு, கொடியுடன் உங்களைத்தானே வரச்சொன்னேன், தாங்கள் உறவுகளுடன் வந்துள்ளீர்களே?" என்று கேட்டார்.

**இராமானுசரின் பதில்:** இராமானுசர் பூரணரிடம், "சுவாமிகள் என்மேல் கோபம் கொள்ளக்கூடாது.தாங்கள் கூறிய தண்டு கொடிக்கு இணையானவர்கள் இவர்கள்.அடியவர்களாகிய எங்களுக்குத் திருவருள் புரியவேண்டும்" என்று கூறினார். உடனே பூரணர் இவர்களை நீங்கள் தண்டு, கொடி எனக் கூறியதால் உங்கள் மூவருக்குமாகத் திருமந்திரத்தைக் கூறுகிறேன் என்றார்.

**பூரணர் இட்ட கட்டளை:** பூரணர் மூவரையும் வீட்டிற்குள் அழைத்து நான் கூறுவதை நன்றாகக் கவனியுங்கள். நான் கூறப் போகின்ற திருமந்திர மறைபொருள்கள் உங்கள் மூவருக்கு மட்டுமே தெரிய வேண்டும். வேறு யாரிடமாவது இதை நீங்கள் கூறுவீர்கள் எனில் அது ஆசிரியர் கட்டளையை மீறியதாகும். அப்படி நடந்தால் அதற்குத் தண்டனையாக நரகமே கிட்டும் என்று கூறினார்.

**திருமந்திரத்தைக் கூறுதல்:** பூரணர், 'திருமகளுடன் கூடிய நாராயணனின் திருப்பாதங்களைப் புகலிடமாகக் கொள்கிறேன். திருவுடன் சேர்ந்த நாராயணனை வணங்குகிறேன்' என்று திருமந்திரத்தைக் கூறினார். பிறகு மூவரும் மூன்று முறை உரக்கச்சொன்னார்கள். திருக்கோட்டியூர் சௌம்ய நாராயணன் திருக்கோவிலின் மதில் சுவரின் மேல் இராமானுசர் நின்று கொண்டு, அனைவரும் அருகில் வாருங்கள், கிடைப்பதற்கரிய பிறவிப்பிணியைத் தீர்க்கும் அருமருந்தான திருமந்திரத்தை உங்களுக்குக் கூறுகிறேன். அனைவரும் இணைந்து சொல்லுங்கள் என இராமானுசர் பொதுமக்களிடம் கூற அவருடன் சேர்ந்து அனைவரும் கூறினர்.

**இராமானுசரின் மனித நேயம்:** பூரணரின் சொல்லை மீறியதற்காக முதலில் இராமானுசர் பூரணரிடம் மன்னிப்பு கேட்டார். பிறகு "கிடைப்பதற்கரிய மந்திரத்தைத் தங்களின் திருவருளால் நான் பெற்றேன். அந்த அருமருந்தை அனைவருக்கும் கூறினால் அவர்கள் தங்களின் பிறவிப்பிணி நீங்கி பேறு பெறுவார்கள். இதற்குத் தண்டனையாக நான் மட்டுமே நரகம் செல்வேன். அவர்கள் அனைவரும் நலமுடன் வாழ்வார்கள்" என்று மனித நேயத்துடன் பூரணரிடம் இராமானுசர் விளக்கமளித்தார். இராமானுசரின் விளக்கத்தைக் கேட்ட பூரணர், 'எம்பெருமான்'என்னும் திருநாமம் என்றென்றும் உமக்கு நிலைத்து, நீங்கள் நீடூழி வாழவேண்டும் என்று ஆசீர்வதித்தார்.

**முடிவுரை:** இராமானுசர் தன்னலமின்றி பிறருடைய நலன் கருதி பொதுமக்களின் துன்பங்களைந்தவர், அவர்களின் பிறவிப்பிணியை நீக்கியவர். என்றென்றும் அவர் புகழ் நிலைத்து நிற்கும்.

45.

**அ) நூலின் தலைப்பு :** அன்று இந்தியாவை அறியாதவர்கள்கூட காந்தியடிகளை அறிந்து இருந்தார்கள். இன்று இந்தியாவை அறியாதவர்களும் மாமனிதர் அப்துல் கலாம் அவர்களை அறிந்து இருக்கிறார்கள். இந்தியாவின் அடையாளமாக, தமிழர்கள் பெருமையாக அறியப்பட்ட அப்துல்கலாம் அவர்களின் தகவல் களஞ்சியம் தான் இந்த 'கனவெல்லாம் கலாம்'. இதுவே இந்நூலின் தலைப்பாகும்.

**நூலின் மையப் பொருள் :** இந்நூலாசிரியர் கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றி உற்று நோக்கி மாமனிதர் அப்துல்கலாம் பற்றி வந்த தகவல்கள், கட்டுரைகள், கவிதைகள் அனைத்தையும் தொகுத்து வகுத்து உள்ளார். அப்துல் கலாம் பற்றி அறிந்து கொள்ள விரும்பும் அனைவரும் படிக்க வேண்டிய நூல் "கனவெல்லாம் கலாம்". நூலைப் படித்தால் வாசகர்கள் கனவெல்லாம் கலாம் வருவார்.

**மொழிநடை :** இந்நூலில் எளிமையான தமிழ்ச்சொற்களையும் நாளேடுகளின் நடையையும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**வெளிப்படுத்தும் கருத்து :** மாமனிதர் அப்துல் கலாம் அவர்களின் வெற்றிக்கு காரணங்கள் எளிமை, இனிமை, நேர்மை. அவர் உலகப் பொதுமறையை ஆழ்ந்து படித்ததோடு மறந்து விடாமல் அதன்படி வாழ்ந்த காரணத்தால் உலகப் புகழ் ஈட்டினார் என்பதே உண்மை. அதனை இந்நூலில் நன்கு உணர்த்தி உள்ளார்.1. காணிக்கைக் கட்டுரைகள், 2. இரங்கல் செய்திகள், 3. கவிதை மாலை, 4. கலாம் அலைவரிசை, 5. கலாம் கருவூலம் என ஐந்து தலைப்புகளில் நூலை வடிவமைத்து உள்ளார்.

**நூல் கட்டமைப்பு :** முன்னணி நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள் மட்டுமல்ல சிற்றிதழ்கள் வரை கலாம் பற்றிய தகவல்களை தேனீ போலவே தேடித்தேடி தொகுத்து உள்ளார். தோரண வாயிலில் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளது உண்மை.

**சிறப்புக் கூறு :** பொதுவாக ஒரு தொகை நூலைப் பொருத்த வரையில் தேடித் தொகுப்பதுகூட அத்தனை அரிய செயல் அன்று; ஆனால் தொகுத்தவற்றை எல்லாம் வகுத்து முறைப்படுத்துவது என்பது அரிதினும் அரிதாகும். அதற்குள் சொந்தமாக தனிநூலை நாம் எழுதி விடலாம்.

**நூல் ஆசிரியர் :** தமிழ்தேனீ முனைவர் இரா. மோகன்.

**அல்லது**

**ஆ) முன்னுரை :** ஒவ்வொரு நாளும் செய்தித்தாள்கள் மூலமாகவும் தொலைக்காட்சி வாயிலாகவும் சாலைவிபத்துகள் பற்றிய செய்திகளை நாம் அறியமுடிகிறது. இக்கால கட்டத்தில் சாலை விபத்துகள் மிக அதிக அளவில் நடைபெறுகின்றன. இதற்கெல்லாம் சாலைவிதிகளை நாம் மதிக்காமல் நடப்பதே காரணமாகும்.

**சாலை விதிகள் :** சாலையில் விபத்துகள் நேரிடா வண்ணம் தடுப்பதற்காக, போக்குவரத்துக் காவல்துறையினர் பணிசெய்கின்றனர். மேலும் பல இடங்களில் வண்ண விளக்குகள் மூலமாக சாலை போக்குவரத்து நெறிப்படுத்தப்படுகிறது. போக்குவரத்தினை முறைப்படுத்தும் குறியீடுகளுக்கும் போக்குவரத்துக் காவலர்களின் சாலை உத்தரவுகளுக்கும் ஏற்ப சாலையை பயன்படுத்த வேண்டும்.

**ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் :** சாலைக்குறியிடுகளை கவனித்து அதன்படி வாகனங்களை இயக்க வேண்டும். இடது பக்கம் செல்லவேண்டும் என்பது சாலை விதிகளில் முக்கியமானதாகும். பாதசாரிகள், நடப்பதற்கான நடை மேடையில் செல்ல வேண்டும். எதிர்த்திசையில் சாலைகளைக் கடக்கும்பொழுது, அதற்கென கோடு போட்டிருக்கும் இடத்தில்தான் கடக்க வேண்டும்.

**விபத்துக்கான காரணங்கள்:** தலைக்கவசம் இன்றி இருசக்கர வாகனம் ஓட்டுதல், மது அருந்தி விட்டு வாகனங்கள் ஓட்டுதல் மற்றும் வேகமாக சாலையில் செல்லுதல்.

**தேவையான விழிப்புணர்வு :** இரு சக்கர வாகனங்களில் இருவருக்கு மேல் பயணிக்கக்கூடாது. பேருந்துகளில் பயணம் செய்யும் போது படிக்கட்டுகளில் நிற்கக் கூடாது. வண்டி ஓட்டுபவர்கள் உடல்நிலை, மனநிலை பாதிக்கப்பட்டிருக்கும் பொழுது, கண்டிப்பாக வண்டி ஓட்டக்கூடாது. மதுவருந்திவிட்டு வண்டி ஓட்டுதல் சட்டப்படி குற்றமாகும். எந்தவொரு வண்டியையும் முந்திச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் செல்லக்கூடாது.

**நம் கடமை:** "தலைக்கவசம் நமக்கு உயிர்க்கவசம்". இரு சக்கர வாகன ஓட்டிகள் தவறாமல் தலைக்கவசம் போட்டுக் கொண்டு வாகனங்களை ஓட்ட வேண்டும். போக்குவரத்துக் காவல்துறையினரின் கட்டளையை மீறி நாம் செல்லக்கூடாது. வாகனங்களில் அதிவேகம் இருக்கக் கூடாது. வாகனம் ஓட்டுபவர்களுக்கென கூறப்பட்டுள்ள சாலைவிதிகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். சாலையில் அந்தந்த வாகனங்களுக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வண்டி ஓட்டக் கூடாது. சாலையில் பாதுகாப்புடன் வாகனங்களை இயக்கி உயிர்பலியை தவிர்ப்போம்.

**முடிவுரை :** 'உயிர் விலைமதிப்பற்றது' மனித உயிர் மட்டுமல்ல; பறவைகள், விலங்குகள் என்று அனைத்து உயிர்களுமே விலை மதிப்பற்றவை. சாலை விபத்தின் போது அந்த ஜீவன்களும் பாதிக்கப்படுகின்றன. எனவே சாலை விதிகளை நாம் பின்பற்றி நடக்க வேண்டும். "சாலை விதிகளை மதிப்போம் விலை மதிப்பில்லா உயிரைக் காப்போம்."

☆ ☆ ☆

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com